சி.சி.3/12

13.05.2019

அ.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கின் 1வது எதிரியை 1998 ம் ஆண்டிலிருந்து தெரியும. 2வது எதிரியை வழக்கிற்கு பின்னால் 2வது எதிரியை தெரியும். 1வது எதிரிக்கும் எனக்கும் 1998ம் ஆண்டு சங்கத்திலிருந்து நீக்கம் செய்யும் வரை தான் சுமூகமாக உறவு இருந்தது என்றால் சரியல்ல. 1999க்கு பிறகு நானும் 1 வது எதிரியும்சேர்ந்து கூட்டம் நடத்தினோமா என்றால் 1999ம் ஆண்டு 1வது எதிரி தலைமையில் கூடடம் நடைபெற்றது. 1999ம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் தான் சங்கம் சம்பந்தமாக நிதி மோசடி செய்ததாக என் மீது தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்றால் சரியல்ல. 1999க்கு பிறகு நானும் 1 வது எதிரியும் 1 வது எதிரிக்கு கீழ் நடைபெற்ற நிர்வாகம் சம்பந்தமாக எந்தவித கூட்டமும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. 2011ம் ஆண்டில் நிர்வாகம் சம்பந்தமாக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் 1வது எதிரி ராமசாமி மற்றும் 2வது எதிரியும் கலந்து கொண்டு தீர்மானத்தில் கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. 01.07.2006க்கு முன்பாக நான் உறுப்பினர் கட்டணம் செலுத்தாததால் நான் அனுப்பிய படிவம் செல்லாது என்று மாவட்ட பதிவாளர் திருப்பி அனுப்பிவிட்டார் என்றால் இல்லை மாவட்ட பதிவாளர் அனுப்பிய கடிதத்தின்பேரில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் ரிட் மனு எண். 6541/2006ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் உரிமையியல் நீதிமன்றத்தில ்பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ரிட் மனுவில் ஏற்பட்ட உத்தரவுப்படி உரிமையியல் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் நானாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு தாக்கல் செய்யாத பட்சத்தில் மாவட்ட பதிவாளரின் உத்தரவ செயல்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. நான் அடிப்படை உறுப்பினராக தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் உறுப்பினராக இல்லாததால் தான் இது நாள் வரை மாவட்ட பதிவாளர் உத்தரவின் பேரிலோ மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஏற்பட்ட ரிட் மனுவின்பேரிலோ உரிமையியில் நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல

ஏற்கனவே வழக்கு நிலுவையில் இருநததால் புதிதாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. நிலுவையில் இருந்த வழக்கு எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்டதுள ன்றால் சரிதான். எதிரிகள் தாக்கல் செய்தவழக்கு ம.சா.ஆ.1 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு என்றால் சரிதான். ஓஎஸ் 504/04 வழக்கு 1998-1999ல் நான்செயலாளராக இருந்த போது ஏற்பட்ட தீர்மானத்தில் கையெழுத்து செய்தது செல்லாது என்று தான் அந்த வழக்கு என்றால் அதுவும் ஒரு பரிகாரம். ஓஎஸ் 504/04 வழக்கில் நான் உறுப்பினராக இருப்பது சம்பந்தமாக எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்றால் சரியல்ல. 1999ல் நான் நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து இன்று வரை நான் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் செயலாளராக தொடர்ந்து இருந்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1999 ல் நான் நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து நான் உறுப்பினர் கட்டணம் செலுத்தவில்லை என்றும் அடிப்படை உறுப்பினருக்கான தகுதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. 1999லிருந்து நான் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் நான் செயலாளர் என்ற முறையில் எந்த தீர்மானத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 2001ம் ஆண்டிற்கு பிறகு நடைபெற்று வரும் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தினால் நடைபெற்று வரும் ஆதரவற்றோர் இல்லம், ஆதரவற்றோர் மற்றும் ஏழை குழந்தைகள் பள்ளி சம்பந்தமாக அறிக்கை தயார் செய்து பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்படும் என்றால் சரிதான். அவ்வாறான ஆண்டு பொதுக்குழுவில் தாக்கல் செய்யப்படும் வரவு செலவு கணக்கில் நான் செயலாளர் என்ற முறையில் கையெழுத:து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் செயலாளராக செயல்பட்டதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஆவணப் பட்டியலை பார்த்தால் சொல்ல இயலும். தமிழ்நாடு சமூக சேவா சங்கம் சம்பந்தமாக விதிகள் திருத்தம் செய்யப்பட்டு மாவட்ட பதிவாளர், மாநில பதிவாளரால் திருத்தம் செய்தத்ற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழக்குகள் நடைபெற்றதால் அவ்வாறான விதிகள் எதுவும் திருத்தம் செய்யப்படவில்லை. என்னுடைய புகாரில் சொல்லப்பட்டுள்ள அரசாணை எண் 1079 நாள் 07.10.2009ம் தேதியிட்ட அரசாணை தற்போது வரை ஊர்ஜிதத்தில் உ்ளளதா என்றால் அது பற்றி எனக்கு உண்மையில் தெரியவில்லை. அரசாணை எண்.

1079 சம்பந்தமாக நான் மதுரை உயர் நீதிமன்ற கிளையில் ரிட் மனு எண். 2034.'.2010ல் மேல் முறையீடு செய்ய்பபட்டு பின்னர் காலாவதி ஆகிவிட்டது என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. நான் தாக்கல் செய்த ரிட் மனுவினை வாபஸ் பெற்று விட்டதால் அரசாணை எண். 1079 நாள் 07.10.2009 அரசாணை தற்போது வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. நான் 2001லிருந்து தற்போது வரை நான் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் நடைபெறும் கூட்டத்தில் ஆதரவற்றோர் பள்ளி சம்பந்தமாக நான் செயலாளர் என்ற முறையில் கையெழுத:து செய்துளளேனா என்றால் கையெழுத்து செய்துள்ளேன். தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திற்கு கள்ளிக்குடியில் மட்டும் அலுவலகம் உள்ளது என்றும் வேறு எங்கும் அதற்கு கிளைகள் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் பாரால் 6ல் தற்போது வரை தமிழ்நாடு சமூக சேவா சங்கம் நடந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தை சித்தர் கூடத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் மாவட்ட பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட நகலின் அடிப்படையில் அவ்வாறாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் விருதுநகர், மதுரை ரயிலார் நகரில் உள்ள கிளை அலுவலகங்கள் துவங்குவதற்கான அனுமதி தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் பொதுக்குழு கூடடத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றால் சரிதான். தமிழ்நாடு சமூக சேவா சங்க விதிகளின் படி ஒவ்வொரு கிளை அலுவலகமும் ஆரம்பிக்கும் போது புதிய கிளை உறுப்பினர்கள் ஒவ்வொறு ஆண்டும் சந்தாவாக ரூ.15 தமிழ் நாடு சமூக சேவா சங்கத்தில் தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் அது பற்றி விதிகளில் இல்லை. அவ்வாறு கிளை அலுவலகம் தொடங்கப்பட்டது சம்பந்தமாக ஆவணம் எதவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஆதரவற்றோர் குழந்தைகள் பள்ளியில் 2002ல் எத்தனை குழந்தைகள் இருந்தார்கள் என்றால் 104 குழந்தைகள் இருந்தார்கள். தற்போது 31 குழந்தைகள் உள்ளார்கள். அவர்கள் தற்போது எங்கு தங்கியுள்ளார்கள் என்று எனக்குதெரியவிலலை. ஆதரவற்ற குழந்தைகளுக்கு எவ்வளவு அரிசி மற்றும் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. தற்போது என் பொறுப்பில் இல்லாததால் எனக்கு சரியான விவரம் தெரியாது. சேவா ஆரம்பப்பள்ளியில் தற்போது எத்தனை பேர்கள் படித்து வருகிறார்கள் எத்தனை

ஆசிரியர்கள் வேலை செய்து வருகிறார்கள் என்றால் தற்போது செயல்படாமல் மூடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4 1ம் எதிரி 3,4 எதிரிகளுக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஆவணம் என்றால் சரிதான். தமிழ்நாடு சமூக சேவா சங்கம் கலைக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டால் அதேபோல் செயல்படும் வேறு ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் இணைக்கவேண்டும் என்றும் அல்லது அரசாங்கத்தில் ஒப்படைக்கவேண்டும் என்றால் உபவிதி உள்ளது என்றால் இல்லை. உபவிதி 5ல் சங்கம் கலைக்கப்படும் நிலை ஏற்படும் போது சங்கத்திற்கு சொந்தமான சொத்துக்கள் முழுவதும் சங்கத்தின் பொதுகுழு தீர்மானித்தின் படி மற்றொரு பதிவுபெற்ற சங்கத்திற்கோ அல்லது மாநில அரசர்ஙகதிற்கோ சேரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளரிடம் அங்கீகாரம் செய்யப்படும். 2.1.2011ம் தேதி பொதுகுழுவில் ஏற்பட்ட 1வது தீர்மானத்தின் அடிப்படையில் அ.சா.ஆ.4வது ஆவணம் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறான பொதுகுழுவும் 2.1.2011ம் தேதியில் நடைபெறவில்லை. 7.11.10ம் நாள் நடைபெற்ற நிர்வாக குழு பொதுகூட்டத்தில் ஏற்பட்ட 2வது தீர்மானத்தின் அடிப்படையில் 3வது ஆவணம் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறான நிர்வாககுழுவும் நடைபெறவில்லை. என் முதல் விசாரணையில் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தினால் செயல்படும் பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலக அலுவலகத்தில் விசாரித்த போது திரு.எஸ்.ராமசாமி அவர்கள் தற்காலிகமாக சேவா ஆரம்பப்பள்ளியை நிறுத்தி வைக்குமாறு எழுத்து பூர்வமாக கொடுத்ததாக கேள்விப்பட்டேன். நான் எந்த ஆவணமும்நேரடியாக பார்க்கவில்லை என்றும்அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் சேவா ஆரம்பப்பள்ளி இயங்குகிறதா என்று எழுத்து பூர்வமாக மாவட்ட கல்வி அதிகாரிக்கு கடிதம் அனுபபினேன். அந்த கடிதத்திற்கு பதில் எதுவும் வரவில்லை. நான் நேரடியாக பார்க்கவில்லை. தற்பொதைய விதிகளின் படி மாணவர்களுக்கு கொடுக்கப்படும் ஈஎம்ஐ எஸ் எண்கொடுக்கப்படுகிறது என்றும் அதை ஆன்லைனில் பார்க்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது வரை 05.022019 வரை அந்தபள்ளி செயல்பட்டு வருகிறது என்றால் அது பற்றி நான் பார்க்கவில்லை. முறைப்படி செயல்பட்டு வருகிறது என்றும் அதனை

சித்தர் கூடம் நடத்தி வருகிறது என்றும் அதை மறைத்து பொய்யான தகவல்களை குறிபபிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் உதவி தொடக்க கல்வி அலுவலர் ஆ்ண்டுதோறும் பள்ளியை ஆய்வு செய்து ஆண்டுவிழாக்களில் கலந்து கொண்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, 15.08.2018ம் தேதி அன்று பள்ளியில் நடந்த சுதந்திர தின விழாவில் மாவட்ட கல்வி அதிகாரி கலந்து கொண்டார்கள் என்றால் நான் இருக்க வேண்டிய இடத்தில் அவர்கள் இருக்கிறார்கள். என்னை செயல்பட விடாமல் தடுக்கிறார்கள். பொதுவாக கூட்டுறவு சங்கத்தில் யாரையும் உறுப்பினராக சேர்க்கச்சொல்லி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது என்றால் சரிதான். அதே போல் யாரையும் சங்கத்தில் இந்த பதவியை அவர்களுக்கு தான் வழங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது என்றால் சரியல்ல. பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி தான் ஒரு தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க முடியும் என்றால் சரியல்ல. தனிநபர்கள் யாரும் பொதுக்குழு உறுப்பினர்களை கட்டாயப்படுத்த முடியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஓஎஸ் 504.־.04 என்ற வழக்கு 1998- 1999 ஆண்டுகளில் நடைபெற்ற செயல்பாடுகளை மட்டும் தான் கட்டுப்படுத்தும் என்றால் 3 ஆண்டுகளுக்கான செயல்பாடுகளை கட்டுப்படுத்தும். அவ்வாறு 3 ஆண்டுகள் என்பது 1999க்கு பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர் கட்டணம் செலுத்தியிருந்தால் தான் உறுப்பினராக தொடர முடியும் என்றால் உண்மையல்ல. அதன் படி 1998 – 2001 வரை உள்ள பதவிக்காலத்திற்கு மட்டும் தான் என்னை செயலாளராக தேர்ந்தெடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. 2002ல் பொதுக்குழு கூடி டி.ரவீந்திரன் என்பவரை செயலாளராக தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த கால கட்டத்தில் பொருளாளராக டைட்டஸ் என்பவர் இருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு 2002 முதலே ரவீந்திரன் என்பவர் செயலாளராக இருந்தார் என்றும் அதன்பிறகு டைட்டஸ் என்பவர் செயலாளராக இருந்தார் என்றும் 2001 ம்ஆண்டிலிருந்து 2010 ம் ஆண்டு வரை சங்கத்தில் பொறுப்பில் நான் இல்லை என்றும் அடிப்படை உறுப்பினர் இல்லை என்றால் சரியல்ல. ஓஎஸ் 504.־.04 வழக்கில் கேட:டுள்ள பரிகாரத்தை தவிர தனியாக வேறு பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் எதிர் வாதம் செய்தேன் எதிரிடை கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை. இன்று வரை

உறுப்பினராக சேர்க்கவேண்டும் என்றோ செயலாளர் பதவி வழங்க வேண்டும் என்றோ தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அ.சா,ஆ, 2 ஆவணத்தில் 1ம் எதிரி தலைவராகவும் என்னை செயலாளராகவும் தொடர்ந்து செயல் பட வேண்டும் என 19.11.2010ம் தேதி ந.க. எண். 326.'.10 மாவடட பதிவாளரிடம் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு முன்பாகவே ந.க. எண். 2196.'.06ல் நாள் 03.07.2006ல் உறுப்பினர் சந்தா கட்டாததால் நான் செயலாளராக செயல்படுவது செல்லாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அது சம்பந்தமாக ரிட் மனு 6541.'.06 ல் உத்தரவு 14.12.2011ல் தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது. அதனால் நான் ம.சா.ஆ,2 ஆவணம் மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ, 6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திற்கு உரிய கிளை அலுவலகம் இல்லை என்றால் சரியல்ல. தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் சீப் பங்சனரி என்ற பொறுப்பு இல்லை என்றால் சரிதான். சீப் பங்சனரி மற்றும் செயலாளர் இரண்டும் ஒன்று தான். நான் கள்ளிக்குடியில் உள்ள தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் அடிப்படை உறுப்பினர் இல்லை என்றும் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் கிளை மதுரை ரயிலார் நகரில் இருப்பதாக தவறான தகவல் கொடுத்து வெளிநாட்டு உதவிகளை பெ்றறு வருகிறேன் என்றால் சரியல்ல. ஒரு சங்கத்தில் எத்தனை கிளை அலுவலகங்கள் இருந்தாலும் அனைத்து கிளை அலுவலக உறுப்பினர்களையும் சேர்த:து பொதுக்குழு அமைக்கப்பட்டு பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்றால் சரிதான். அவ்வாறு நான் மதுரை ரயிலார் நகரில் உள்ள கிளை அலுவலகத்தில் உள்ள உறுப்பினர்களை நான் கள்ளிக்குடியில் தமிழ்நாடு சமூக சேவா சங்க உறுப்பினர்களை வைத்து 2001 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் பொதுக்குழு எதுவும் நடத்தினேனா என்றால் நடத்தியுள்ளேன். 2010ல் குத்தகை ஆவணம் எழுதிக்கொடுத்த விபரத்தை நான் 2011ம் ஆண்டு தெரிந்துகொண்டேன். அது சம்பந்தமாக நான் உரிமையியல் நீதிமன்றத்திலோ சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடமோ நடவடிக்கை மேற்கொண்டேனா என்றல் இல்லை இந்நீதிமன்றத்திலும்மாவடட பதிவாளர் அலுவலகத்திலும் முறையிட்டுள்ளேன். அந்த குத்தகை ஆவணம் பதிவு செய்த விபரம் மட்டும் எனக்கு தெரியம். வேறு எந்த விபரமும் தெரியாது. 2011லிருந்து தற்போது வரை

சித்தர் கூடம் தான்தமிழ்நாடு சமூக சேவா சங்கம் ஏற்கனவே செய்து வந்த பணிகளை செய்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. 2011ம் ஆண்டிலிருந்து தற்போது வரை நான் நேரில் சென்று பார்வையிட்டுள்ளேனா என்றால் ஒரே ஒரு முறை சென்றுள்ளேன். தேதி நேரம் நாள், வருடம் எனக்கு நினைவில்லை. அவ்வாறு செல்வதற்கு வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சென்றேன். அந்த நீதிமன்ற உத்தரவை இந்நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த நீதி மன்ற உத்தரவில் செயலாளராக பணிபுரிவதற்கு போலிஸ் பாதுகாப்ப வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது, நான் சொல்வது போல் எந்த உத்தரவும் பெறவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல செய்துள்ள தகவல் உரிமைச்சட்டத்தின் படியான ஆவணங்கள் அ.சா. ஆ, 8., 9, 10 ஆவணங்களில் கேள்விகள் மட்டும் உள்ளது என்றும் பதில்கள் இலலை என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். (எதிரி தரப்பு வழக்கறிஞர்வேண்டுகோளின் படி வழக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)